***ஈரானில் இருந்து இந்திய குடிமக்களை மீட்க ஆபரேஷன் சிந்து என்ற திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது (ஜூன் 18, 2025)***

ஜூன் 18, 2025

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நடந்து வரும் மோதலின் விளைவாக மோசமடைந்து வரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஈரானில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்காக இந்திய அரசு கடந்த பல நாட்களாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2. முதல் கட்டமாக, இந்திய தூதரகம் வடக்கு ஈரானில் இருந்து 110 இந்திய மாணவர்களை வெளியேற்றி, 17 ஜூன் 2025 அன்று ஆர்மீனியாவிற்குள் பாதுகாப்பாக செல்ல உதவியது. ஈரான் மற்றும் ஆர்மீனியாவில் உள்ள எங்கள் தூதரகங்களின் மேற்பார்வையின் கீழ், மாணவர்கள் ஆர்மீனிய தலைநகர் யெரெவனுக்கு சாலை வழியாகப் பயணம் செய்துள்ளனர். ஆபரேஷன் சிந்துவின் ஆரம்ப கட்டங்களின் ஒரு பகுதியாக, இந்த மாணவர்கள் 18 ஜூன் 2025 அன்று மதியம் 1455 மணிக்கு சிறப்பு விமானத்தில் யெரெவனிலிருந்து புறப்பட்டு, 19 ஜூன் 2025 அதிகாலையில் புது தில்லியை வந்தடைவார்கள்.

3. வெளியேற்றும் செயல்முறையை சுமூகமாக எளிதாக்கியதற்காக ஈரான் மற்றும் ஆர்மீனியா அரசாங்கங்களுக்கு இந்திய அரசு நன்றி தெரிவிக்கிறது.

4. வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்கு இந்தியா மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கிறது. தற்போதைய நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஈரானில் உள்ள இந்திய தூதரகம், அதிக எண்ணிக்கையிலான இந்திய குடிமக்களை நாட்டிற்குள் விரோதப் போக்கு அதிகரித்துள்ள பகுதிகளிலிருந்து ஒப்பீட்டளவில் பாதுகாப்பான பகுதிகளுக்கு நகர்த்துவதற்கும், பின்னர் கிடைக்கக்கூடிய மற்றும் சாத்தியமான விருப்பங்களைப் பயன்படுத்தி அவர்களை வெளியேற்றுவதற்கும் உதவி வருகிறது.

5. ஈரானில் உள்ள இந்தியர்கள், தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்துடன் அதன் அவசர உதவி எண் மூலமாகவும், புதுதில்லியில் வெளியுறவு அமைச்சகத்தால் நிறுவப்பட்ட 24x7 கட்டுப்பாட்டு அறையுடனும் தொடர்பில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தின் அவசர உதவி எண்கள்:

i. அழைப்புக்கு மட்டும்: +98 9128109115, +98 9128109109

ii. வாட்ஸ்அப்-க்கு: +98 901044557, +98 9015993320, +91 8086871709

iii. பந்தர் அப்பாஸ்: +98 9177699036

iv. ஜஹேதன்: +98 9396356649

v. இமெயில்- cons.tehran@mea.gov.in

வெளியுறவு அமைச்சகத்தால் புது தில்லியில் அமைக்கப்பட்ட 24 X 7 கட்டுப்பாட்டு அறையின் உதவி எண்கள்:

800118797 (டோல் ஃப்ரீ), + 91-11-23012113, + 91-11-23014104, + 91-11-23017905

வாட்ஸ்அப்: +91-9968291988; இமெயில்- situationroom@mea.gov.in

புது தில்லி

ஜூன் 18, 2025